D. Karthic PG Assistant

# இரண்டாம் திருப்புதல் பொதுத் தேர்வு - 2023

## பன்னிரெண்டாம் வகுப்பு

Reg.No.

## தமிழ்

*நேரம்: 3.00 மணி* *மதிப்பெண்கள்: 90*

### பகுதி - அ

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **14 x 1 = 14**

1. சிற்பி பாலசுப்பிரமணியத்தின் 'இளந்தமிழே' பாடல் இடம் பெற்ற நூல்

அ) மஸ்னவி ஆ) நிலவுப்பூ இ) காவிய தர்சன் ஈ) துறைமுகம்

2. 'காவினெம் கலனே : சுருக்கினெம் கலப்பை' - இத்தொடரில் 'கலன்' என்ற சொல்லின் பொருள்

அ) வேளாண் கருவி ஆ) போர்க் கருவி

இ) தச்சுக் கருவி ஈ) இசைக்கருவி

3. மாதவி பெற்ற பட்டம்

அ) நாட்டியப் பேரொளி ஆ) நர்த்தகி

இ) தலைக்கோலி ஈ) நாட்டிய மயூரி

4. புயலுக்குப் பெயர் வைக்கும் கூட்டமைப்பு நாடுகள்

அ) பத்து நாடுகள் ஆ) எட்டு நாடுகள்

இ) ஐந்து நாடுகள் ஈ) பதினெட்டு நாடுகள்

5. த.ந.சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப்பெற்ற மயிலை சீனி.வெங்கடசாமி எழுதிய நூல்

அ) கிறித்தவமும் தமிழும் ஆ) பௌத்தமும் தமிழும்

இ) இசுலாமும் தமிழும் ஈ) சமணமும் தமிழும்

6. 'காய்நெல்' இச்சொல்லுக்கான இலக்கணகுறிப்பு

அ) உம்மைத் தொகை ஆ) பண்புத் தொகை

இ) வினைத் தொகை ஈ) உவமைத் தொகை

7. 'பகடு' என்பதன் பொருள்

அ) எருமை ஆ) எருது இ) ஆடு ஈ) குதிரை

8. பிழையற்ற தொடரைக் கண்டறிக.

அ) சென்னையிலிருந்து நேற்று வந்தான் ஆ) கோவலன் மதுரைக்குச் சென்றது

இ) பறவைகள் நெல்மணிகளை வேகமாகக் கொத்தித் தின்றது.

ஈ) குதிரையும் யானையும் வேகமாக ஓடியது.

9. பொருத்துக :

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | மாச்சீர் | - | i) | கருவிளம், கூவிளம் |
| 2. | காய்ச்சீர் | - | ii) | நாள், மலர் |
| 3. | விளச்சீர் | - | iii) | தேமாங்காய், புளிமாங்காய் |
| 4. | ஓரசைச்சீர் | - | iv) | தேமா, புளிமா |

10. 'என்னைப் போல் சிவாஜி நடிப்பார் ஆனால் என்னால்தான் சிவாஜி போல் நடிக்க முடியாது' என்று குறிப்பிட்ட நடிகர்

அ) மார்லன் பிராண்டோ ஆ) அமிதாப்பச்சன்

இ) அர்னால்டு ஈ) ஜாக்கிசான்

11. தமிழ்நாட்டிலுள்ள பிராம்மிக் கல்வெட்டுகளின் ஆராய்ச்சிக்கு அடிகோலியவர்
   அ) கே.வி.சுப்பிரமணியனார் ஆ) ஐராவதம் மகாதேவன்
   இ) தி.வை.சதாசிவ பண்டாரத்தார் ஈ) இவர்களில் யாருமில்லை
12. ஐம்பெருங்காப்பியம் என்னும் சொற்றொடரைத் தம் உரையில் குறிப்பிட்டவர்
   அ) சிவஞானமுனிவர் ஆ) மயிலைநாதர்
   இ) ஆறுமுகநாவலர் ஈ) இளம்பூரணர்
13. 'நிறை' மாத இதழின் ஆசிரியர்
   அ) சாந்தா தத் ஆ) அப்துல் ரகுமான் இ) வைரமுத்து ஈ) சுரதா
14. "தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்" என்னும் கருத்தை உணர்த்தும் கதை
   அ) முதல் கல் ஆ) தலைக்குளம் இ) உரிமைத்தாகம் ஈ) கோடைமழை

## பகுதி - II

### பிரிவு - அ

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக:** **3 x 2 = 6**

15. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட தமிழன் துணை வேண்டும் என்கிறார்?
16. அதிசய மலரின் பூச்செடி எவ்வாறு முளைத்ததாக தமிழ்நதி கூறுகிறார்?
17. 'எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும்' - யாருக்கு?
18. நஞ்சுண்பவர் என வள்ளுவர் யாரை இடித்துரைக்கிறார்?

### பிரிவு - ஆ

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி:** **2 x 2 = 4**

19. தேசியப் பேரிடர் மேலாண்மை எப்போது யாரால் அமைக்கப்பட்டது?
20. வித்தியாரம்பம் என்பது என்ன?
21. 'தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்' நூல் பற்றிக் குறிப்பு வரைக.

### பிரிவு - இ

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடை தருக:** **7 x 2 = 14**

22. மொழியின் சொற்றொடர் அமைப்பை விளங்கிக் கொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் உதவுவன எவை?
23. *உவமைத்தொடரைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக.*
   1) பசுமரத்தாணி போல 2) மடைதிறந்த வெள்ளம் போல
24. *கலைச் சொற்களுக்கு ஏற்ற தமிழ்ச் சொற்கள் தருக :*
   1) Lobby 2) Stamp pad
25. *சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க :*
   1) தாமரை 2) கோவில்
26. *பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்று:*
   1. ரவைக்கு சித்தப்பன காவலுக்குப் போவச்சொல்லு
   2. இப்ப எனக்குப் புரிஞ்சு போச்சு நீயும் புரிஞ்சிக்கோ
27. *பொருள் வேறுபாடறிந்து தொடரமைக்க :*
   1) ஊண் - ஊன் *(அல்லது)* தின்மை - திண்மை
28. *ஏதேனும் ஒன்றனுக்கு பகுபத உறுப்பிலக்கணம் தருக :*
   அ) பொலிந்தான் அ) பேசுவார்

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



29. ***ஏதேனும் ஒன்றனுக்கு புணர்ச்சி விதி தருக :***

அ) அருங்கோணம் ஆ) பூம்பாவாய்

30. ***கீழ்க்காணும் தொடர்களில் அடைப்புக்குள் உள்ள பெயர்ச்சொல்லைத் தொடர்களுக்கு ஏற்றவாறு மாற்றி எழுது:***

1. நேற்று முதல் ................. (அணை) நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.
2. உங்களுக்கு .............. (யார்) நன்மை என நினைக்கிறீர்கள்.

**பகுதி - III**

**பிரிவு - அ**

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக:** **2 x 4 = 8**

31. நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள்?
32. எவற்றையெல்லாம் விட நன்றி உயர்ந்தது? குறள்வழி விளக்குக.
33. நாட்டிய அரங்கின் அமைப்பு பற்றி இளங்கோவடிகள் கூறுவனவற்றை விளக்குக.
34. 'ஈசன் மகன் நின்றனர் ஓர் ஏழையென ஓர்மின்' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

**பிரிவு - ஆ**

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக:** **2 x 4 = 8**

35. மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்க.
36. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக்குடும்பம் - விவரிக்க.
37. திரைப்படத்தில் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.
38. தாயும் தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்திற்குச் செய்யும் உதவிகள் யாவை?

**பிரிவு - இ**

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி:** **3 x 4 = 12**

39. அ) பொருள் வேற்றுமை அணியைச் சான்றுடன் விளக்குக.

***(அல்லது)***

ஆ) சொற்பொருள் பின்வருநிலையணியைச் சான்றுடன் விளக்குக.

40. அ) இலக்கிய நயம் பாராட்டுக : (மையக் கருத்துடன் மூன்று நயங்கள் சுட்டுக)

முச்சங்கங் கூட்டி
    முதுபுலவர் தமைக்கூட்டி
அச்சங்கத் துள்ளே
    அளப்பரிய பொருள்கூட்டி
சொற்சங்க மாகச்
    சுவைமிகுந்த கவிகூட்டி
அற்புதங்க ளெல்லாம்
    அமைந்த பெருமாட்டி. - கண்ணதாசன்

41. பாடாண் திணை ***(அல்லது)*** பரிசில் துறையைச் சான்றுடன் விளக்குக.

42. ***தமிழாக்கம் தருக :***

1. Learning is a treasure that will follow its owner everywhere.
2. A new language is a new life.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



3. If you want people to understand you speak their language.
4. Knowledge of language is the doorway to wisdom.

43. 'தாய்மொழி' *அல்லது* 'அன்பு' என்னும் தலைப்பில் கவிதை ஒன்றினை எட்டு அடிகளுக்கு மிகாமல் எழுதுக.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** **3 x 6 = 18**

44. அ) 'அறிவுடைமை வாழ்வின் உயர்வுக்குத் துணை நிற்கும்' என்பதை வள்ளுவம் வழிநின்று நிறுவுக.

*(அல்லது)*

ஆ) கவிதை எழுத அறிய வேண்டுவனவாக சுரதா கூறுவனவற்றை விவரிக்க.

45. அ) குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது. எவ்வாறு? விளக்குக.

*(அல்லது)*

ஆ) நிருவாக மேலாண்மை குறித்து வெ.இறையன்பு கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

46. அ) பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரிக்க.

*(அல்லது)*

ஆ) சங்க கால வரலாற்றை அறிய புகழூர்க் கல்வெட்டு எவ்வகையில் துணைபுரிகிறது? விளக்குக.

47. *அடிபிறழாமல் செய்யுள் வடிவில் தருக :* **4 + 2 = 6**

அ) 'வையகம் பனிப்ப ......' என்று தொடங்கும் நெடுநல்வாடை பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) 'சுடும்' என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.

********

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com